# இலங்கைக் கலைஞர்

# எம்.சார்ளிஸ்

- எம்.சார்ளிஸ் அல்லது மாலிகாவகே சார்ளிஸ் என்னும் கலைஞர் **இலங்கையின் சித்திரக் கலையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய யுக புருஷராகக் கருதப்படுகிறார்.**
- **கடொல்கல்கே மகா சித்தர குருன்னான்சேயின் கீழ் விகாரை ஓவியங்கள்** வரைய ஆரம்பித்து அதனைத் தொடர்ந்தார்.
- அவர் வரைந்த தனித்துவமான **முதல் ஓவியம் கொழும்பு மாலிகாகந்த விகாரையில் அமைந்துள்ளது.**
- எம்.சார்ளிஸ் கலைஞர் தனது ஓவியங்களை மேற்கத்தேயக் கலை மரபின் தாக்கத்தைக் கொண்டு அவற்றுக்கு ஒத்ததாக வரைந்துள்ளார்.
- காலனித்துவ ஆட்சிக் காலத்தில் இலங்கை வாழ் மக்கள் பலர் மேற்கத்ததேய பழக்க வழக்கங்களைப் பின்பற்றியதுடன் விக்ரோரியா மகாராணியின் அரச குடும்பத்தினரின் படங்களையும், **சர்வதேச நிலக்காட்சிகளையும் தமது வீட்டுச் சுவர்களை அலங்கரிக்கப் பயன்படுத்தினர்.**
- இக்கால கட்டத்தில் எம்.சார்ளிஸ் பௌத்த ஓவியங்களை வரைந்து **ஜேர்மனிக்கு அனுப்பி அவற்றை லிதோ அச்சு முறையில் அச்சிட்டு** சிங்கள பௌத்த மக்களுக்கு விநியோகித்தார்.
- **கி.பி.1923ஆம் ஆண்டளவில் லிதோ அச்சு முறையில் கிட்டத்தட்ட 36 ஓவியங்கள் அளவில் அச்சிட்டு வெளியிட்டார். அவற்றுள் சில:**
    1. சித்தார்த்தரின் பிறப்பு.
    2. தாமரைப் பூவில் நடந்து வருதல்.
    3. கல்வி கற்றல்.
    4. சித்தார்த்தரின் திருமணம்.
    5. சித்தார்த்தரும் பிரஜாபதி கோதமியும்.
    6. துறவறம் பூணுதல்.
    7. சீவலி பிக்கு.

## இவரது பௌத்த ஓவியங்களை இருவகைப்படுத்தலாம்:

- ➢ விகாரை ஓவியங்கள்
- ➢ லிதோ முறையில் அச்சிடப்பட்ட ஓவியங்கள்

teacher Learning Management System

- சித்திரக் கலையைப் போன்றே இவர் சிலை செய்வதிலும் வல்லவராகக் காணப்பட்டார்.

  **மாத்தறை வெஹெறகேனயில் உள்ள பாரிய புத்தர் சிலை** இவரது திறமையை எடுத்துக் காட்டுகிறது.

**எம்.சார்ளிஸ் வரைந்த ஓவியங்கள் காணப்படும் பௌத்த விகாரைகள்:**

1. கொழும்பு மாலிகாகந்த விகாரை.
2. கரகம்பிட்டிய சுபோதாராமய.
3. மத்துகம பாந்திய சிறி மங்கலாராமய.
4. பொத்துபிட்டிய பூஜாராமய.

- **எம்.சார்ளிஸ் ஓவியக் கலைஞரின் ஓவியங்களிற் காணப்படும் கலை அம்சங்கள்**
  - சரியான ஒழுங்கிணைப்பு.
  - தூரதரிசனத் தன்மை.
  - ஒளி நிழல் காட்டல்.
  - நிறப் பிரயோகம்.
  - அலங்காரத் தன்மை.
  - ஐரோப்பியக் கலை மரபின் ஒத்த தன்மை.

eteacher Learning Management System

**இளவரசன் சித்தார்த்தனும் தாயாரும்** (*லிதோ அச்சுப்படம்*)



- இவ் ஓவியத்தில் **சித்தார்த்தகுமாரனும்(*புத்தர்*) அவரது தாயாரும்(*கோதமி*) மாளிகையினுள்** தனிமையாக இருக்கும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.

- **மேலைத்தேய மற்றும் கீழைத்தேய இயற்கைவாத ஓவியப்பாணிகளைத்** தழுவி இந்த ஓவியம் வரையப்பட்டுள்ளது.
- **ஐரோப்பிய மறுமலர்ச்சிக்கால ஓவியக் கலைஞர்கள்** வரைந்த கன்னி மரியாளையும் யேசு பாலகனையும் காட்டும் **மடோனா ஓவியங்களைப் போன்று** இந்த ஓவியம் உள்ளது.
- ஓவியத்திலுள்ள மனித உருவங்களுக்கு அழகாகச் வரையப்பட்டுள்ள **ஆடையணிகள் கீழைத்தேய ஓவியப்பாணி**யின், குறிப்பாக **இந்திய கலை மரபைச் சேர்ந்த ஆடையணிகளின் இயல்புகள்** தெளிவாகத் எடுத்துக்காட்டுகின்றது.
- ஓவியத்தில் பலவர்ணங்களைக் கொண்டு **முப்பரிமாண இயல்புகள்** மிகச் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
- ஒட்டுமொத்த ஓவியத்தின் முன்பகுதியும், பின்பகுதியும் மாத்திரம் காட்டப்பட்டுள்ளன.
- மாளிகையின் யன்னலின் மூலம் காட்சியளிக்கும் நிலத்தோற்றத்தின் தூரக்காட்சி இயல்புகள் சிறப்பாக காட்டப்பட்டுள்ளது.

eteacher system

**தாமரைப் மீது நடந்து வருதல்** (*லிதோ அச்சுப்படம்*)



- ஓவியவெளியின் ஆழம் வெளிப்படுத்துமாறு தூரக்காட்சி இயல்புகளை உள்ளடக்கி, இயற்கைவாதப் பாணியில் இந்த ஓவியம் சித்தரிக்கப்பட்டுள்ளது.
- முன்பகுதி, இடைப்பகுதி, பின்பகுதி என்றவாறாக தளத்தின் மீது தூரக்காட்சி இயல்புகளின்படி உருவங்களும் பல நிகழ்வுகளும் சித்தரிக்கப்பட்டுள்ளன.

- ஓவியத்தின் பின்பகுதி வெளியானது தூரக் காட்சி இயல்புகளுடன் நிலத்தோற்றக் காட்சிகளைக் கொண்டுள்ளது.
- முப்பரிமாண இயல்புகள் வெளிப்படுமாறு வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

eteacher
Learning Management System